[பேரவைத் தலைவர்] [2005 மார்ச் 29

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 221, திரு. ப. இளவழகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

221—

தடுப்பணை

***946—திரு. ப. இளவழகன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள மருதை ஆற்றின் குறுக்கே வாரணவாசி — புதுப்பாளையம் அருகே தடுப்பணை கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருதை ஆறு, உப்பிலியாபுரம் தொகுதி பச்சைமலையில் தோன்றி, கொள்ளிடம் ஆற்றில் சென்று இணையக்கூடிய ஆறு ஆகும். ஒரு நாள் பெருமழை பெய்தாலே, பல நாள் வெள்ளப் பெருக்கெடுத்து இந்த ஆற்றின் மூலமாக நீர் ஓடி, கொள்ளிடம் ஆற்றில் வீணாகக் கலக்கின்றது. இந்த ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, அந்த நீரைச் சுக்கிரன் ஏரி என்கின்ற, சுமார் 525 ஏக்கர் பரப்பளவுள்ள அந்த ஏரிக்கு, அந்த நீரைத்

2005 மார்ச் 29]

திருப்பிவிட்டால், அதன்மூலம் சுமார் 7,000 ஏக்கர் பாசன வசதி பெறக்கூடிய திட்டமாகும். இந்த வினாவில் கண்ட இடத்தில் தடுப்பணை அமைத்தால், சில இயற்கை ரீதியான இடையூறுகள் ஏற்படும் என்கின்ற காரணத்தால், பொறியாளர் வல்லுநர்கள், மாற்றுத் தல ஆய்வு மேற்கொண்டு, இடையத்தான்குடி ஊராட்சி, ஆரனூர் என்கின்ற கிராமத்தின் அருகே தடுப்பணை அமைத்து பணி மேற்கொண்டால் நல்ல பயனுடையதாக இருக்கும் என்று அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார்கள். மேலும், சுக்கிரன் ஏரி, மருதை ஆறு—திட்டத்தின்மூலம் பயன் அடையக்கூடிய பகுதியாகக் கண்டறியப்பட்டுள்ள நிலப்பரப்பு, புள்ளம்பாடி கால்வாய்மூலமாகப் பாசன வசதி பெறக்கூடிய பகுதியாகும். பல ஆண்டுகளாக வறட்சியின் காரணமாக இந்த புள்ளம்பாடி கால்வாயில் நீர் வரத்து குறைந்து போவதால், இந்தப் பகுதியிலே சுமார் 10,000 ஏக்கர் பாசனம் பெற முடியாத ஒரு சூழ்நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், ஒரு நாள் மழை பெய்தாலே, இந்த 10,000 ஏக்கரும் பாசனம் பெறக்கூடிய மிகச் சிறந்த திட்டமாகும். எனவே, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை, இந்த ஆண்டே மேற்கொண்டு பணி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்பொழுது மாற்றுத் திட்டமாக ஆரனூர் கிராமம், சுக்கிரன் ஏரிக்குப் பாசன வசதிக்காக மருதை ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு கட்டுவது குறித்து இங்கே குறிப்பிட்டுக் கொண்டிருக்கின்றார். ஆகவே, காவிரி ஆற்றின் மேலணைக்கு மேற்பகுதியில் பிரியும் புள்ளம்பாடி கால்வாயிலிருந்து சுக்கிரன் ஏரிக்கு நீர் வரத்து உள்ளது. ஆனால், சமீப காலமாக மேட்டூர் அணையின் நீர் மட்டம் தேவையான அளவு இல்லாததாலும், மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாகவும், புள்ளம்பாடி கால்வாயில் தேவையான அளவு நீர் வரத்து இல்லாததால், சுக்கிரன் ஏரிக்குப் பாசன வசதிக்கு நீர்ப் பற்றாக்குறையாகவுள்ளது. எனவே, சுக்கிரன் ஏரிக்கு நீர் வரத்து ஏற்படுத்தும்பொருட்டு இத்திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இத்திட்டத்தின்மூலம் 1,714.68 எக்டேர் பாசன உறுதியும், மேலும் 385.55 எக்டேர் புதிய பாசன நிலங்களும் பயன்பெறும் என்று ஆய்வு அறிக்கை கூறுகிறது. இத்திட்டத்தின் தற்போதைய 2005–2006 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு, தோராயமாக ரூ.275 இலட்சங்கள் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது.

மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு கிடைத்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, இத்திட்டம் வரும் நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–05

திரு. ப. இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்ட மக்கள்மீது தனி அக்கறை கொண்டு, பல்வேறு நலத் திட்டங்களை ஆற்றிவரும் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லரசிற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 222, திரு. என். நன்மாறன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

222—

தூர் வாரும் பணி

***42180—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, அனுப்பானடி கால்வாயைத் தூர் வாரி சுத்தம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய பணி தற்சமயம் ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை. திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரம் சிறப்பாகவும், தூய்மையாகவும், சுகாதார நிலையோடு